# பத்தி எழுத்துக்கள்

செயலட்டை தரம் 10

## தமிழ் இலக்கிய நயம்

தொகுப்பு திரு.சுரேஸ்பிரதீபன்
ஸ்ரீவாணி தமிழ் மகா வித்தியாலயம்
தெஹியோவிட்ட கல்வி வலயம்

# பத்தி எழுத்துக்கள்

- பகுதி 01 க்கான குறு வினாக்கள்

1. “மென்மையே வாழும்” பத்தி எழுத்தின் ஆசிரியர் பெயர் என்ன?
2. “வாழ்க்கை என்பது போராட்டம் , இதில் வலிமையானவையே வாழும்...” எனக் கூறியவர் யார்?
3. மென்மையானவையே நீண்ட காலம் வாழும் எனக்கூறியவர் யார்?
4. “எனக்கு ஒன்றும் தெரியவில்லை , நீங்ளே சொல்லி விடுங்கள்” இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
5. வாளை உருவியவன் வாளாலே சாவான் இக்கூற்றை கூறும் நூல்?
6. பாலைப்பண் வழிப்பறிக் கொள்ளையர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களை கீழே போட்டுவிடச்செய்யும்?
   1) இக்கூற்று இடம்பெறும் நூல் எது?
   2) மேற்படி நூலின் ஆசிரியர் யார்?
7. போர்க்களத்தில் பகைவர் அஞ்சும் என் வலிமை இந்தப்பெண்ணின் வதன வனப்புக்கு தோற்று அழிந்து விட்டதே...
   1) இக்கூற்றினை காப்பியமாக்கும் நூல் எது?
   2) வதன வனப்பு என்பதன் பொருள் என்ன?
8. வன்மையின் வெற்றி எப்படிப்பட்டது? மென்மையின் வெற்றி எப்படிப்பட்டது?
9. மென்மையே வாழும் என்பதற்கு பத்தியாசிரியர் முன்வைக்கும் கருத்துக்கள் எவை?
10. தான் கூற வந்த கருத்தினை வெளிப்படுத்த ஆசிரியர் கையாண்ட உத்திகள் எவை?

# பத்தி எழுத்துக்கள்

- பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக,

'போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே, 'ஓ' என அலறும் ஒரு போர் வீரனைக் காமத்துப் பாலில் காட்டுகிறார் திருவள்ளுவர்.

வன்மையின் வெற்றி புறவயமானது. மென்மையின் வெற்றி அகவயமானது. ஆண் புறவயமாகவே பெண்ணை ஆள முடியும். பெண்ணோ ஆணை அகவயமாக ஆள்கிறாள்.

வன்மையால் மண்ணைத்தான் பிடிக்க முடியும்.

மனங்களைப் பிடிக்க மென்மைதான் உதவும்.

வன்மையானவர்களுக்கு வரலாறு என்ற மயானத்தில் மட்டுமே இடம் கிடைக்கிறது.

மென்மையானவர்களுக்கோ அழியாத காவியங்களில் இடம் கிடைக்கிறது.

வன்மையின் வெற்றிக்கு அற்பாயுசு, மென்மையின் வெற்றிக்கோ தீர்க்காயுசு.

உண்மையில் மென்மையே வன்மை.

1. இவ் உரைப்பகுதியில் குறிப்பிடப்படும் மையக்கருத்து என்ன?
2. இங்கு எடுத்துக்காட்டுக்காக குறிபிபடப்படும் நூல் எது?
3. வன்மை, மென்மைகளுக்கிடையிலான வேறுபாட்டினை குறிப்பிடவும்?
4. ஆசிரியரின் மொழி நடையைஆராய்க?
5. அழியாத காவியங்களில் இடம்பிடிப்பது எது ? அதற்கான காரணங்களை குறிப்பிடவும்?

- பத்தி எழுத்து, "மென்மையே வாழும்" எனும் பகுதியில் இருந்து பின்வரும் தலைப்புகளை விளக்குக,
    1. மென்மையே வாழும் என்பதை கூற பத்தி ஆசிரியர் கையாண்ட உத்திகள்
    2. வன்மைக்கும் மென்மைக்கும் இடையிலான வேறு பாட்டினை காட்டும் ஆசிரியரின் மொழிநடை